மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அண்ணாவைப் பற்றி நாட்டு மக்கள் நினைவு கொள்ள முழுக்க முழுக்க வானொலியை நம்ப வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்றுள்ளார்கள். அண்ணா அவர்களுடைய சொல்லோவியங்கள், வாழ்க்கை வரலாறு இப்போதே வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளாகவும், இசை நிகழ்ச்சிகளாகவும், நாடக நிகழ்ச்சி களாகவும் நாட்டு மக்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது.

திரு. கா. காளிமுத்து: அண்ணாவின் கதை ஒலிபரப்பாக நிகழ்த்தப் படுகின்றபோது அந்தக் கதையைக் கவிதை நடையில் முதல்வர் அவர்கள் எழுதித்தருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருமணம் ஆகவில்லை. ஆன பிறகு குழந்தைக்கு என்ன பெயர் என்று கண்டுபிடிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: அண்ணா அவர்களைப் பற்றி நமது முதல்வர் கலைஞர் அவர்கள் தானே ஒரு கவிதை இயற்றிப் பாடியுள்ளார்கள். அதைப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் வைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இருக்கிற எரிச்சல் போதாதா?

Expenditure on staff of State Planning Commission.

* 547 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state the annual expenditure that will be incurred on the staff of the State Planning Commission?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலத் திட்ட ஆணைக்குழு இப்போது தான் அமைக்கப்பட்டுள்ளது, திட்ட ஆணைக்குழுவின் பணியாளர் பற்றிய செலவை மதிப்பிடச் சில காலம் ஆகும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மாநிலத் திட்டக் குழுவானது இதுவரை என்ன பணியாற்றி இருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போதுதான் தொடங்கப் பெற்று அதனுடைய பணி ஆரம்பமாகியிருக்கிறது. அதற்குள்ளாக அவைகளைப் பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாநிலத் திட்ட ஆணைக் குழுவானது அடுத்த சட்டமன்றத் தொடரிலாவது அவர்களுடைய முதல் ஆலோசனைகளை எடுத்து வைப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அடுத்த தொடரில் அவர்களுடைய முதல் பரிந்துரைகளைப் பற்றி எடுத்துச் சொல்லுவார்கள். அதைப் பற்றி நாம் இங்கு கருத்துக்களைச் சொல்லலாம் என்று கூறியிருக்கிறேன்.

திரு. கோவை செழியன்: இந்த மாநிலத் திட்டக் குழு மாநிலத் திற்குத் தேவையான தொழிற்சாலைகள், அதற்கான வாய்ப்புகள்பற்றி ஆராய்ந்தறிந்து ஒரு திட்டத்தைக் கொடுத்தால் அவைகளை அப்படியே மத்திய அரசாங்கமும், மத்தியத் திட்டக் குழுவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாநிலத் திட்டக் குழு நம்முடைய மாநிலத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், மூலதனம் பற்றியெல்லாம் ஆராய்ந்து தொழில் நுட்பப் பணியாளர்களால் சீர்தூக்கிப் பார்த்து எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அவைகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தி மத்திய அரசு உதவியை நாடுவோம். அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லுவதற்கு இப்போது என்னுல் இயலாது. நாமே அவைகளில் எவற்றை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்த பிறகுதான் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படவேண்டும்.

DR. H. V. HANDE : May I know whether there is any proposal to link the State Planning Body with the Central Planning Body Is there going to be any co-ordination between the work of the State Planning Body and also the suggestions of the Central Planning Body? What are the terms of reference of the State Planning Body? What are the duties earmarked for it and where is its office? May I know further particulars from the Hon. Chief Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டையும் இணைப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, இங்கு எடுக்கப்படுகின்ற முடிவுகளை இந்த அரசு சார்பில் எப்படி நிறைவேற்றுவது என்பதற்கான வழிவகைகளை நாடி அறிந்து அவற்றைச் செயல்படுத்துவதற்கு மத்தியில் இருக்கும் திட்டக் குழுவினுடைய துணையை நாடுவதுதான் முறையாக இருக்கும். இல்லாவிட்டால் ஒன்றுக்கொன்று போட்டி என்ற முறையில் ஆகிவிடக் கூடும். அதற்குப் போட்டியாக இல்லாமல் அந்த வகையில் வேண்டுமானுல் இணைந்து செயல்படும் என்பதை நான் கூறமுடியும். இதற்கான அலுவலகங்கள் எல்லாம் இப்போது இங்கிருக்கும் எழிலகத்தில் அலுவலாளர்கள் பணி புரியத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சொ. காவேரிமணியம்: இம் மாநிலக் குழுவில் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் இடம் பெறுகிருர்களா அல்லது அவர்களுடைய பரிந்துரைகள் கேட்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாவட்ட அளவில் எந்த அதிகாரிகளும் இடம் பெறவில்லை. திட்டக் குழு தன்னுடைய ஆராய்ச்சியைப் பரவலாக நடத்துகிற நேரத்தில் அவர்களுடைய துணையை நாடிப் பெறும்.

இராஜமன்னர் குழுவுக்கான செலவு.

* 548 வினு—திரு. ஒ. என். சுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மத்திய–மாநில உறவுப் பற்றிய இராஜமன்னர் குழுவின் பணி தொடர்பாக இதுவரையில் ஆன மொத்தச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1—5—1971-ஆம் நாள் வரை பணியிலிருந்த பணியாளர் சம்பளம் முதலிய செலவு உட்பட மத்திய–மாநில உறவு ஆய்வுக்குழுப்பணி தொடர்பாக ஏற்பட்டுள்ள மொத்தச் செலவு ரூ. 2,13,678-25 ஆகும்.